## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.383/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. சுடலைமணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of November 2025.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். சிலிண்டர் சப்ளை செய்யும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அப்பா. வழக்கின் எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள். 26.05.2015 ம் தேதி காலை 05.30 மணியளவில் நான் என்னுடைய மனைவி, என்னுடைய அம்மா, அப்பா ஆகியோர் வீட்டில் இருந்தோம். என்னுடைய அம்மா ஆறுமுகம் வீட்டு முத்தத்தை பெருக்கி தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்தார். எங்களது வீடு உள்ளே தள்ளிஉள்ளது. வீட்டிலிருந்து முடுக்கு வழியாக வாசலிற்கு வரவேண்டும். எனது அம்மா தண்ணீர் தெளித்து கோலம்போட்டுவிட்டு வீட்டிற்குள் வந்துவிட்டு மீண்டும வெளியேவந்து பார்த்தபோது, 3 ம் எதிரி கோலத்தின் மீது குப்பையை வைத்துள்ளார். எனது அம்மா ஏன் குப்பையை போட்டாய் என கேட்டதற்கு 3 ம் எதிரி வாரியலால் எனது அம்மாவை அடித்துவிட்டார். எனது அம்மா சத்தம்போடவும் எனது அப்பா வெளியே வந்து பார்த்து 3 ம் எதிரியிடம் சத்தம்போட்டதற்கு மூன்று எதிரிகளும் சேர்ந்து 1, 2 எதிரிகள் எனது அப்பாவை கம்பால் அடித்தனர், 3 ம் எதிரி செங்கலால் இடது தோள்பட்டையில் அடித்தார். மாடசாமி கம்பால்

எனது அப்பாவை தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார். 2ம் எதிரி கம்பால் வலது தோள்பட்டையில் அடித்து காயம் ஏற்படுத்தினார். வெளியே அதிகமாக சத்தம்கேட்டதால் நான் வெளியே வந்து பார்த்தேன். எனக்கு திருமணம் முடிந்து 4 நாட்கள் கழித்து சம்பவம் நடந்தது. நான் எதற்கு எனது அப்பாவை அடித்தாய் என 2ம் எதிரியிடம் கேட்டேன். அவர் என்னை அடிக்கவந்தார். திருமணம் ஆகி 4 நாட்கள் ஆகியதால் எனது மனைவி என்னை வீட்டிற்குள் அழைத்து சென்றுவிட்டார். எதிரிகள் கையிலிருந்த கம்பை சம்பவயிடத்தில் விட்டு சென்றுவிட்டனர். எனது அப்பாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அ.சா.1 மருத்துவனையிலிருந்தபோது போலீஸார் எனது அப்பாவிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும்.போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.383/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. ஐயாகுட்டி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2025 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of November 2025.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். மாடு மேய்த்து வருகிறேன். வழக்கின் எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள். 26.05.2015 ம் தேதி காலை 05.30 மணியளவில் என்னுடைய மனைவி ஆறுமுகம் வீட்டின் முன்பு பெருக்கிகொண்டிருந்தார். அப்போது 3 ம் எதிரி என்னுடைய வீட்டு வாசலில் குப்பைகளை கொட்டினார். அதற்கு எனது மனைவி ஏன் இப்படி குப்பைகளை கொட்டுகிறாய் என கேட்டதற்கு 3 ம் எதிரி எனது மனைவியை அவதூறான வார்த்தைகளால் பேசினார். அந்த வார்த்தைகளை என்னால் சொல்லமுடியாது. நான் வீட்டிற்குள் இருந்து சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தேன். நான் மீண்டும் வீட்டின் முடுக்கிற்குள் செல்லும்போது என் பின்னால் இருந்து பேச்சியம்மாள் செங்கலைகொண்டு இடது தோள்பட்டையில் அடித்தார். நான் வலியால் துடித்தேன். நான் வெளியே ஓடிவந்தேன். அப்போது 1 மற்றும் 2 எதிரிகள் கம்புடன் வந்து 2 ம் எதிரி என்னை நடுமண்டையில் அடித்தார். 1 ம் எதிரி என்னை கம்பால் வலது தோள்பட்டையில் அடித்தார். நான் சத்தம்போட்டவுடன், எனது சத்தம்கேட்டு எனது மகன் சுடலைமணி

வந்தார். எனது மகன் வந்து சத்தம்போடவும் கையில் வைத்திருந்த கம்பை அருகிலிருந்து வயற்காட்டில் வீசிவிட்டு சென்றுவிட்டனர். சம்பவத்தை எனது மகன், மனைவி ஆகியோர் பார்த்தார்கள். என் மகன் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீஸார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.